## குலத்தொழில் முறையைக் கொண்டுவரும்

# விஸ்வகர்மா திட்டத்தை தி.மு.க. நிராகரிக்கிறது!

## டெல்லியில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

புதுடெல்லி, நவ.29-

“குலத் தொழில் முறையைக் கொண்டுவரும் ஒன்றிய அரசின் திட்டத்தை தி.மு.க. நிராகரிக்கிறது” என்று நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் கூறியுள்ளார்.

டெல்லியில் நேற்று பத்திரிக்கையாளர் சந்திப்பில் பிரதமர் விஸ்வகர்மா திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தாது எனும் முடிவு குறித்த கேள்விக்கு தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி அவர்கள் பதிலளித்துள்ளார்.

அதில்அவர்குறிப்பிட்டுள்ளதாவது:-



தி.மு.க. விஸ்வகர்மா திட்டத்தை முழுமையாக நிராகரித்துவிட்டது. தமிழ்நாட்டின் முதலமைச்சர், தி.மு.க.வின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விஸ்வகர்மா திட்டத்தை தி.மு.க. தீவிரமாக எதிர்ப்பதன் காரணத்தை ஏற்கனவே மிகத் தெளிவாக கூறியுள்ளார்.

எனது நிலைப்பாடும் அதுதான். சாதி அமைப்பையும், பெற்றோர்களின் தொழிலையே குழந்தைகள் ஏற்க வேண்டும்எனும் குலத்தொழில் முறையையும் அத்திட்டம் இங்கு மீண்டும் கொண்டுவருகிறது. அதை நாங்கள் ஏற்க முடியாது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

## ஒன்றியச் செயலாளர் ஜி.வெங்கடேசன் ஏற்பாட்டில் கோவிலம்பாக்கம் ஊராட்சியில்

# “உதயநிதியின் உதயநாள் விழா” திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கக் கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – ச.அரவிந்த்ரமேஷ் – சைதை சாதிக் – எஸ்.விக்டோரியா – நா.சந்திரபாபு சிறப்புரை!

சென்னை, நவ. 29 -

சென்னை தெற்கு மாவட்டம், புனித தோமையார் மலை தெற்கு ஒன்றியம், கோவிலம்பாக்கம் ஊராட்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திராவிட மாடல் அரசியல் சாதனை விளக்கக் கூட்டம் மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எஸ்.கே.சீனிவாசன் தலைமையில் ஒன்றியக் கழகச் செயலாளர் கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன் முன்னிலையில் மாவட்டப் பிரதிநிதி ஆர்.சொக்கலிங்கம் எம்.சி, கிளைக் கழகச் செயலாளர்கள் இ.ஜெகநாதன், பி.மணிக்கண்ணன், இ.முத்து மற்றும் டி.மாதவன் எம்.சி, கே.வி.விஜயகுமார் எம்.சி, சுமதிகுமார் எம்.சி, மஞ்சுளா ரமேஷ் எம்.சி. ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், லயன் ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ, தலைமை கழகப் பேச்சாளர் சைதை சாதிக், இளம் பேச்சாளர் எஸ்.விக்டோரியா, தொகுதி பார்வையாளர் நா.சந்திரபாபு ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

இதில் மாவட்டத் துணைச் செயலாளர் பாலவாக்கம் மு.மனோகரன், பொதுக்குழு உறுப்பினர் எம்.கே.ஏழுமலை, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பா.அருண்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.இ.பாண்டியன், ஒன்றியக் கழக நிர்வாகிகள் ஜே.டி.மனோநிதி, த.டில்லிபாபு, கே.குமார், எம்.ஜி.ஏழுமலை, என்.வேதகிரி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் நன்மங்கலம் வி.கிரி, வேங்கைவாசல் வி.ஜெயச்சந்திரன், ஒன்றிய கவுன்சிலர்கள் மோகனா பிரியா, சரவணன், கல்பனா, சுரேஷ், ஊராட்சி மன்றத் துணைத் தலைவர்கள் மேடவாக்கம் எஸ்.கோபு, ஒட்டியம்பாக்கம் எஸ்.லோகிதாஸ், வேங்கைவாசல் டி.என். அன்புமணி மற்றும் மாவட்டக் கழக, ஒன்றியக் கழக நிர்வாகிகள், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், கிளை கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் இ.விஜய் நன்றி கூறினார்.

## ஒருங்கிணைந்த தருமபுரி – கிருஷ்ணகிரி மாவட்டக் கழகங்களின் முன்னாள் செயலாளர் – கழக முன்னோடி

# எம்.சென்ன கேசவன் துணைவியார் திருமதி செ.அமராவதி அம்மாள் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 29-



ஒருங்கிணைந்த தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டக் கழகத்தின் செயலாளராகப் பொறுப்பு வகித்தவரும், கழக மூத்த முன்னோடியுமான எம்.சென்ன கேசவன் அவர்களின் துணைவியார் – திருமதி செ.அமராவதி அம்மாள் அவர்கள் மறைவுற்றார்.

இம்மறைவுச் செய்தியறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்ன கேசவன் - அமராவதி அம்மாள் ஆகியோரின் புதல்வர்களான - இனாம் காட்டுப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் செ.மனோகரன், சாமல்பட்டி வேளாண்மை கூட்டுறவு வங்கியின் செயலாளர் செ.சிவக்குமார், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் செ.கார்த்திகேயன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதுடன், அன்னாரின் மறைவுக்கு தமது இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்கள்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவையொட்டி மதுராந்தகம் அரசினர் மருத்துவமனையில் நேற்று முன்தினம் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கும் நிகழ்ச்சி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆண்டோ சிரில் ராஜ் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ் தலைமை தாங்கினார். மதுராந்தகம் நகர மன்ற தலைவர் மலர்விழிக்குமார், நகர செயலாளர் குமார், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மணி, சஞ்சய் காந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ கலந்துகொண்டு நேற்று பிறந்த ஏழு குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து பரிசு பெட்டகம் வழங்கினார். மதுராந்தகம் தெற்கு ஒன்றிய செயலாளர் சிவக்குமார், கருங்குழி பேரூர் செயலாளர் சுந்தரமூர்த்தி, பேரூராட்சித் தலைவர் தசரதன், சிறுபான்மையினர் நல அணி அமைப்பாளர் நூருல் அமித் உள்ளிட்டர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, மாவட்ட செயலாளர். அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி 139 அ வட்டக்கிளையின் சார்பில் வட்டக்கிளை அலுவலகம் முன்பு வட்டச் செயலாளர். சை.மு.சேகர் தலைமையில் டி.என்.சிவமணி,எம்.எஸ்.ஹரிபாபு, இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி.வெங்கடேசன் முன்னிலையில் பகுதி செயலாளர். 10வது மண்டலக் குழுத் தலைவர். எம்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பொது மக்களுக்கு லட்டு வழங்கினார். விழாவில் களக்காடி. எல்லப்பன், ஆர்.ரமேஷ்,வெ.புருசோத்தமன், அஞ்சல்.ராமன்,டி.தியாகு, சார்ப்.சரவணன்,ஜி.ஏழுமலை, கொடி. து.சுரேஷ்பாபு, டி.கோபாலகிருஷ்ணன், யமஹா.ராஜேஷ், பூ.பாஸ்கர்,கே.முருகேசன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

# உதயமெழும் சூரியனே,! உலகோங்கி வாழ்கவே!

## பேராசிரியர் மா.செல்வராசன்



சதயநாள் உதயவன்
தமிழ்ச்சோழன் மாமன்னன்
சதயங்கள் எடுத்தவன்
சரித்திரம் படைத்தவன்
பதிகங்கள் மீட்டவன்
பார்புகழ ஆண்டவன்
மதிகொண்டு முறையாக
மாநிலம் அளந்தவன்
சதியாளர் ஒழித்தவன்
சகலகலை வல்லவன்
அதிஉயரக் கோயிலை
அழகுற எழுப்பியவன்!

புதையலாய்ப் பொருள்களைப்
போர்களில் ஈட்டியவன்
எதையுமே மக்களுக்கு
என்றாக்கிக் காட்டியவன்
முதல்முதல் மெய்க்கீர்த்தி
முழுப்புகழ் தீட்டியவன்
சதுர்முதல் கலைபல
தழைத்திட ஊட்டியவன்
கதிகலங்க அயல்வேந்தர்
கடல்கடந்து வாட்டியவன்
இதயங்கள் கவர்ந்தவன்
ஈழமுதல் நாடுபல
உதயங்கள் கண்டவன்
ஒப்பிலா இராசராசன்
புதல்வனாம் இராசேந்திரன்
புலிச்சோழன், போர்களில்
முதல்வனாம் , பலமன்னர்
முடித்தலை முடித்தவன்!
நிதம்நிதம் வெல்பவன்
நெடும்புகழ் கொள்பவன்
பதமாக ஆண்டவன்
பரகேசரி பூண்டவன்
நதிகங்கை கொண்டவன்
நகரொன்று கண்டவன்
புதிதாகச் சோழபுரம்
பொலிவுற எழுப்பியவன்!மதிகொண்
டான் வீரசோழன்
மக்களின் ஈரவேந்தன்
அதிர்அலை கடல்தாண்டிக்
கீழ்த்திசை அரசுகள்
துதிபாடி அடிதொழுது
சோழப்பே ரரசுக்கு
நிதிசெலுத்த வைத்தவன்
நேர்த்தொடர்பை நிறுவியவன்!
அதிவெற்றி கங்கைகொண்டான்
அரியணை ஏறினாற்போல்
உதயநிதி தமிழ்நாட்டின்
ஒப்பற்ற துணைமுதல்வர்

பதவியில் அமர்ந்தபின்
பகைவரெலாம்
அலறுகின்றார்!

சதயநாள் இராசராசன்
தம்வழி இராசேந்திரன்
எதையுமே வெற்றியாய்
எய்தியது போலவே
இதயநிதி கழகத்தின்
இளையநிதி இயங்குகின்றார்;
பதியந்தான் எனினும்நற்
பதியாக வளர்கின்றார்!

மதுமலர் இருக்கையன்று
மாநில ஆட்சியின்று!
நொதுமலர் பொய்மூட்டை
நூறுநூறாய் அவிழ்க்கையில்
புதர்களும் முட்களும்
பொத்துகிற கற்களும்
அதரெங்கும் மண்டுதல்
அகற்றியே புறம்போக்கிப்
புதுமைகள் பலபுரிந்து
புவியெலாம் புகழ்பெறுக!

பதவிதான் மணிமேகலை
பயன்செய்த அமுதசுரபி!
உதவிதான் அள்ள அள்ள
உலகந்தான் மகிழ்ச்சியுறும்!
இதமாக யாவர்க்கும்
இயங்கியே, மாற்றாரும்
நுதல்உயர்த்தி வியந்திட
நுண்ணறிவாய்ச் செயலாற்றி
முதல்இடம் பெறுகவே
முத்துவேலர் பெரும்பேரன்!

தென்னவன் பாண்டியன்
செருவென்ற நெடுஞ்செழியன்
சின்னவன் எனப்பகைவர்
சிரித்தெள்ளிப் பேசிடச்
சொன்னவர் ஏழ்வேந்தர்
தோற்றோடப் போரிலே
வென்றவன்போல்
விளங்குகின்றாய்;
வெற்றிமுரசு அறைகின்றாய்!
ஒன்றிய அரசினை
உறங்கவிடாது உலுக்குகின்றாய்;
குன்றிய மனத்தோரின்
குட ல்களைக் கலக்குகின்றாய்!
இன்றைய அரசியலில்
இளைஞரின் தலைவனாய்
நன்றுநீ உயர்ந்துள்ளாய்;
நம்பிக்கை நாயகனாய்
நின்றுநீ ஒளிர்கின்றாய்;
நெடுவெற்பாய் வளர்கின்றாய்;
தென்திசைச் சூரியனாய்த் திகழ்
கின்றாய்!

களங்கண்டு இளவயதில்
கலக்கிய கரிகாலன்
வளம்பெற்ற சோழவேந்தன்
வடவரை மடக்கியே
உளங்களில் விளங்குதல்போல்
உதயநிதி கழகத்தின்
இளந்தலைவர்: திராவிட
இனத்தலைவர் ஆகுகவே;
அளந்தறியாப்
புகழுடன்
ஆட்சியில் வாழ்கவே!

இதுநேரம் பெரியாரை
இமயமுயர் அண்ணாவை
எதுவெனினும் முடிக்கின்ற
எழுச்சியுறு கலைஞரை
முதல்வராம் தளபதியை
முப்போதும் மனங்கொண்டு
விதவிதமாய்ப் புதுநெறியாய்
வினையாற்றி வெல்கவே!
உதயமெழும் சூரியனாய்
உதயநிதி நூறாண்டு
இதயங்கள் போற்றவே
இவ்வையம் வாழ்கவே!



கழக இளைஞரணிச் செயலாளர் – தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளைப் பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் கொண்டாடும் விதமாக, எழும்பூர் தொகுதியில் ஏழாவது நிகழ்வாக, வார்டு எண்.61, எழும்பூர், பாந்தியன் சாலையில் அமைந்துள்ள அரசினர் மகப்பேறு மருத்துவமனையில் 27.11.2024 அன்று பிறந்த 37 குழந்தைகளுக்குத் தங்க மோதிரம் மற்றும் பரிசுப் பொருட்களைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் 28.11.2024 அன்று அம்மருத்துவமனையில் நடந்த நிகழ்ச்சியில் வழங்கினார்.

# தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. மதுரை மண்டல மத்திய சங்க நிர்வாகிகள்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொ.மு.ச. மதுரை மண்டலத்தின் (பதிவு எண். 253/ MDU., பேரவை இணைப்பு எண். 288) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 26.11.2024 அன்று தொ.மு.ச. பேரவை இணைப்பொதுச்செயலாளர் திரு. ஜெ.விஜயகுமார் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாக வெற்றி பெற்றுள்ளனர்.

மத்திய சங்க நிர்வாகிகள்

தலைவர் - எஸ். கார்த்தசுரேஷ், துணைத் தலைவர்கள் – 1) பி. ரவி, 2) என். கண்ணன், 3) எஸ். ரெங்கசாமி, பொதுச்செயலாளர் - மேலூர் வி. அல்போன்ஸ், துணைப் பொதுச் செயலாளர்கள் – 1) கே. முத்துக்குமார், 2) ஐ. அய்யனா,ர் 3) எம். சுரேஷ், பொருளாளர் - எஸ். மணிகண்டன், துணைச்செயலாளர்கள் – 1) ஆர். செல்வநாதன், 2) எஸ். சுந்தரமூர்த்தி 3) எஸ். சோமசுந்தரம், 4) பி. தெய்வேந்திரன், 5) எஸ். சுப்புராஜ், 6) சி. மோகன்ராம், அமைப்புச் செயலாளர் – ஐ. கண்ணன், பிரச்சார செயலாளர் – ஐ. கஜேந்திரன்,

இடம்: கலைஞரகம்
நாள்: 27.12.2024

**(மு.சண்முகம், எம்.பி.)**
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஜெ.சீனிவாசன் தலைமையில் ஆதரவற்ற முதியோர் இல்லம் மற்றும் குழந்தை காப்பகத்தில் காலை மற்றும் இரவு உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, கழக மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், கலைஞர்நகர் தெற்கு பகுதிச் செயலாளர் கே.கண்ணன், கலைஞர்நகர் வடக்கு பகுதிச் செயலாளர் மு.ராசா ஆகியோர் கலந்து கொண்டு உணவு வழங்கினர். உடன் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பா.அருண்குமார், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ஆர்.சசிகுமார், பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் தளபதி முருகன், ராமசாமி பாண்டி, செல்வம், நரசிம்மன், ஜெய் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.